## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிறிய தேயிலைத் தோட்டங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று / தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தரும் வகையில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகார சபையில் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறையை மேற்பார்வை செய்தல் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகள் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அதிகாரசபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக அதிகாரசபையின் தொடர்ந்து நிலைத்திருத்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும்

எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் அதிகாரசபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது அதிகாரசபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

------------------------------

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

--------------------------------------------------------------------------------------------------------------

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்திலினைப்

பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு ''சிறப்பாகத் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசதியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடான இணக்கமின்மை

| | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட வேண்டிய ரூபா 58,090,138 தொகை செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன் ஏனைய வருமானங்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 273,201 தொகையான இயந்திரப் பெறுமானத் தேய்விற்கான மிகை ஒதுக்கீட்டினை வரிக்கு முன்னைய இலாபத்திற்கு செம்மையாக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் அலுவலக உபகரணங்களின் கைதவிர்ப்பிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 272,461 தொகை மிகையாக காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | சுட்டிக்காட்டப்பட்ட சமர்ப்பித்தலிலுள்ள பிழைகளை ஒழுங்குமுறைப்படி சரி செய்வதற்கும் சரி செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றினை மீண்டும் சமர்ப்பிப்பதற்கும் குறித்துக் கொண்டுள்ளேன் | நியமத்திற்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்றினை சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) | அதிகார சபையினால் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட எனினும், தொடர்ச்சியாக பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்ற ரூபா 36,839,950 கிரயமான வாகனங்களின் விளைதிறனான ஆயுட் காலமானது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 3 இன் பிரகாரம் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டிருக்காததுடன் | 2020 ஆம் ஆண்டின் போது வாகனங்களை மீண்டும் மதிப்பீடு செய்வதற்கு குறித்துக் கொள்கின்றேன். | நியமத்தின் பிரகாரம் சொத்துக்களின் விளை திறனான ஆயுட்காலத்தை மீண்டும் மீளாய்வு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இச்சொத்துக்கள் தொடர்பாக பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 7 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவும் இல்லை. | | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரண விடயங்களை மீள் மதிப்புச் செய்கையில் அச்சொத்து சார்ந்துள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரண வகுதியானது முழுமையாக மீள்மதிப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் காலி பிராந்திய அலுவலகத்திலுள்ள அனைத்து தளபாடங்கள் பொருத்திகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மாத்திரம் மீள்மதிப்புச் செய்யப்பட்டிருந்தும் தலைமை அலுவலகத்தில் மற்றும் ஏனைய பிராந்திய அலுவலகங்களில் அச்சொத்துக்களின் வகுதி முழுமையாக மீள்மதிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை அவ்வாறே, நியமத்தின் 47 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரண விடயம் ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை மீள் மதிப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 38,815,350 பெறுமதிக்கு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள காணிகள் அதிகார சபையினால் 2015 | காலி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் அனைத்து சொத்துக்களும் மீள்மதிப்புச் செய்யப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், உங்களின் பிரேரணையின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டின் போது மீள் மதிப்புச் செய்வதற்கு குறித்துக் கொள்கின்றேன். அவ்வாறே எதிர்காலத்தில் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் உதவியுடன் அதிகார சபையின் காணிகளை மீள் மதிப்புச் செய்து 2020 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் செம்மையாக்குவதற்கு குறித்துக் கொள்கின்றேன். | நியமத்தின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரண வகுதி முழுமையாக மீள் மதிப்புச் செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். அவ்வாறே ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை காணிகள் மீள்மதிப்புச் செய்யப்படுதல் வேண்டும். |

திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் மீள் மதிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை அதன் காரணமாக இக்காணிகளின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டில் ரூபா 4,807,865 தொகையான வட்டி வருமானத்தின் அடிப்படையில் செலுத்த வேண்டிய ரூபா 1,346,202 தொகையான வருமான வரிப் பொறுப்பு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | வட்டி வருமானத்திற்கு நேரடியாக தொடர்புபடுகின்ற நிறுத்தி வைத்தல் வரி கழித்ததன் பின்னரான பெறுமதி வருமானத்தில் கணக்கீடு செய்யப்பட்டது. வரி செலுத்துதல் அல்லது செலுத்த தவறுதல் தொடர்பாக இறைவரித் திணைக்களத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட வில்லை என தெரிவிக்கின்றேன். | வட்டி வருமானத்தின் அடிப்படையில் செலுத்த வேண்டிய வருமான வரிப் பணத்தைக் கணித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சங்கங்களுக்காக 1998 ஆம் ஆண்டின் போது கடன் அடிப்படையின் கீழ் வழங்கப்பட்டிருந்த வாகனக் கடன்களுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 6,664,321 தொகை அச்சங்கங்களிலிருந்து கிடைக்க வேண்டிய மீளமைப்புச் செய்யப்பட்ட வாகனக் கடனாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் அக்கடன் மீதிகளுக்குரிய வாகனங்களில் 23 | சமர்ப்பிக்கப் பட்டுள்ளவாறு மீளமைப்புச் செய்யப்பட்ட ரூபா 6,664,321 பணத்தில் உள்ளடக்கப்பட்ட சங்கங்கள் வாகனங்களை வழங்கும் போது ஏற்பட்ட நட்டம் ரூபா 6,315,532 ஆகும். அப்பணத்தை கணக்கேடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு தற்பொழுது பணிப்பாளர் சபை தீர்மானம் மற்றும் குழு சிபார்சு வழங்கப்பட்டுள்ளதுடன் பதிவழிப்பதற்கு திறைசேரியின் அங்கீகாரமும் | அதிகார சபையினால் பொறுப்பேற்கப்பட்ட வாகனங்களை கணக்கீடு செய்ததன் பின்னர் விற்பனைகளிலிருந்து பெற்ற பணத்திலிருந்து செலவுகளைத் தீர்த்து வைத்து மிகுதியை திறைசேரிக்கு அனுப்புதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாகனங்கள் அதிகார சபையினால் பொறுப்பேற்கப்பட்டு விற்பனை செய்ததிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 9,823,577 பணத்தில் ரூபா 9,207,958 செலுத்த வேண்டிய வைப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் மேற்கூறிய மீளமைப்புச் செய்யப்பட்ட கடன் மீதிக்குரிய தீர்த்து வைக்கப்பட வேண்டிய பணம் இனங்காணப்பட்டு கணக்குகளில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | வேண்டப்பட்டிருந்தது. வாகன விற்பனைகளின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட பணத்தை பதிவழிப்பதற்கு திறைசேரியின் அங்கீகாரம் வேண்டப்பட்டிருந்த போதிலும் இதுவரை கிடைக்காமையின் காரணமாக பதிவழிப்பதற்கு அங்கீகாரம் கிடைக்கும் வரை கணக்குகளில் இவ்வாறு காட்டப்பட்டுள்ளது. | |
| (இ) | மீளாய்வாண்டின் போது காலி பிராந்திய அலுவலகத்திற்குச் சொந்தமான வலஹன்துவ நாற்று மேடைக்காகச் செலுத்தப்பட்ட முற்கொடுப்பனவுகள் ரூபா 1,056,844 தொகை முற்பணக் கொடுப்பனவுகளாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக அச்செலவு நாற்று மேடையில் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட இறுதி இருப்பு பெறுமதிக்கு சேர்க்கப்பட்டிருந்தது. இதனால் அதன் இறுதி இருப்பின் பெறுமதி அத்தொகையால் அதிகரித்து நிதிக் கூற்றுககளில் காட்டப்பட்டிருந்தது. | காலி பிராந்திய அலுவலகத்தின் வலஹந்துவ நாற்று மேடையில் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 2018/2019 நாற்று மேடை மற்றும் 2019/2020 நாற்று மேடையாக 2 காலப்பகுதிக்குரிய நாற்றுக்கள் பௌதீக ரீதியாக காணப்பட்டன. மீளாய்வாண்டிற்கான இலாப நட்டத்தை கணிப்பீடு செய்யும் போது 2018/2019 மேடைகளின் அனைத்து வருமானங்களும் செலவுகளும் முறையாக கணக்கீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டிற்கான வலஹன்துவ மேடையின் இலாபம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கின்றேன். | அடுத்து வரும் ஆண்டிற்காகச் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் முற்கொடுப்பனவுகளாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஈ) | காலி பிராந்திய அலுவலகத்தை புனரமைப்புச் செய்வதற்காக 2019 திசெம்பர் 31 ஆந் திகதி | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டின் கீழ் கட்டிடத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த | மீளாய்வாண்டின் இறுதியில் பொறியியலாளரால் சான்றுப்படுத்தப்பட்ட வேலைப் பெறுமதி |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 8,096,120 தொகையான ஒப்பந்தம் காலி பிடிகல பிரதேசத்தில் தனியார் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது இந்த ஒப்பந்தத்தின் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. எவ்வாறாயினும், இந்த ஒப்பந்தம் தொடர்பாக ரூபா 10,000,000 பணம் மீளாய்வாண்டில் நடைபெறும் வேலையாக ஏனைய நிதிச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு அப்பெறுமதியால் கடன் கொடுத்தோர் கணக்கு செலவு வைக்கப் பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த நடைமுறை வேலை மற்றும் கடன் கொடுத்தோர் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | அத்தியாவசியமான திருத்த வேலைகள் 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்ட பணத்திற்கு மேலதிகமாக ஒரு பழைய கட்டிடத்தை திருத்தம் செய்தலும் காலி மரபுரிமையின் அடிப்படையில் செய்யப்பட வேண்டியிருந்தமையும் அடிப்படையில் உருவாகிய நிச்சயமற்ற செலவினைப் போல குத்தகைப் பணத்தையும் உள்ளடக்கி ரூபா 10 மில்லியனுக்காக நடைபெற்றுவரும் வேலை மற்றும் கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டது. | மாத்திரம் நடைபெறும் வேலை மற்றும் கடன் கொடுத்தோராக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியில் பௌதீக இருப்பு மெய்மையாய்வின் பிரகாரம் ரூபா 6,454,098 கிரயமான தலைமை அலுவலகத்தின் இருப்பு மீதிகள் பௌதீக ரீதியாக காணப்படவில்லை என்பது வெளிப்படுத்தப் பட்டிருந்தும் அதற்குத் தேவையான செம்மை யாக்கல்கள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பௌதீக ரீதியாக காணப்படாத மீதியை காட்டியமை ஆரம்பிக்கப்பட்டதானது 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளிலிருந்தாகும். இந்த இருப்பினை இணக்கம் செய்தலினை மேற்கொள்வதற்கான விசேட நிகழ்ச்சித் திட்டமாக உதவி முகாமையாளர் (நிதி) அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டது. இந்த இணக்கம் செய்தலுக்கு இணங்க சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இருப்பு இணக்கம் செய்தலினை விரைவாக மேற்கொண்டு நிதிக் கூற்றுக்களில் தேவையான செம்மையாக்கல்களைக் காட்டுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டின் போது கட்டளையிடப்பட்ட ரூபா 5,723,641 தொகையான பொருள் இருப்பு அப்பொருட்கள் பெற்றுக் கொள்ளப்படுவதற்கு முன்னர் நானாவித இருப்புக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்ததனால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நானாவித இருப்புக் கணக்கின் மீதி அத்தொகையால் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | பெறுகை நடைமுறைகளின் மூலம் இனங்காணப்பட்ட வழங்குனர்களுக்கு கொள்வனவு செய்வதற்காக கொள்வனவுக் கட்டளைகள் வழங்கப்பட்டிருந்தன. கட்டளைகளை வழங்குவதன் மூலம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட கடப்பாடுகளுக்காக மற்றும் உடன்படிக்கை செய்யப்பட்ட கடன் கொடுத்தோரின் அளவினை கடன் கொடுத்தோருக்கு செலவு வைக்கப்பட்டு இருப்புக் கணக்கிற்கு ரூபா 5,723,641 வரவு வைக்கப்பட்டது. | மீளாய்வாண்டின் போது கட்டளையிடப்பட்ட எனினும் களஞ்சியத்திற்கு கிடைத்திருக்காத பொருட்கள் வழிச் சரக்காக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 14,260,603 தொகையான நாற்று மேடை இருப்பு நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட வேண்டிய போதிலும் அவை ஏனைய நிதிச் சொத்துக்களாக காட்டப்பட்டிருந்தன. | கடந்த ஆண்டின் போது நாற்று மேடை இருப்பு குறைந்த திரவத் தன்மையைக் கொண்டிருந்ததன் அடிப்படையில் நிதி நிலைமைக் கூற்றில் ஏனைய நிதிச் சொத்துக்களாகக் காட்டப்பட்டிருந்தது. எனினும், உத்தேசிக்கப் பட்டுள்ளவாறு 2020 ஆம் ஆண்டின் போது நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டுவதற்கு குறித்துக் கொள்கின்றேன். | நாற்று மேடை இருப்புக்கள் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்படுதல் வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டில் ரூபா 73,907078 ஆக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்த காணிகளின் பெறுமதியினுள் அதிகார சபைக்கு உரிமை ஒப்படைக்கப்படாத அரசாங்கம், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு, மஹவெலி அதிகார சபை ஆகிய நிறுவனங்களுக்குச் | ஆதனங்களை ஒழுங்கு முறையாகப் பொறுப்பேற்பதற்கு மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதனால் உரிய ஆதனங்களின் பெறுமதிகள் அதிகார சபையின் வருடாந்த கணக்குகளுக்கு உள்ளடக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டது. | காணி உரிமையை விரைவாக அதிகார சபை பொறுப்பேற்பதற்கும் அதிகார சபைக்குச் சொந்தமானதாகக் காணப்படுகின்ற சொத்துக்களை மாத்திரம் கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| சொந்தமான ரூபா 35,091,728 தொகையான காணிகளும் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் இக்காணிகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | மேற்கூறிய அனைத்து விடயங்களையும் கருத்திற் கொண்டு உரிய ஆதனங்கள் 2005 ஆம் ஆண்டின் போது மீள்மதிப்பு பெறுமதி கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்த துடன் அதிகாரசபையின் ஆதனங்களை மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது. தீர்த்து வைக்கப்படாத ஆதனங்களை எதிர்காலத்தில் கணக்கீடு செய்யும் போது பதிவுகளை ஈடுபடுத்தி சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 1.5.4 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | துணை அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| காலி | 19,230,055 | 18,751,782 | 478,273 | கட்டிடங்களின் நிர்மாணம் பிராந்திய அலுவலகங்களின் கணக்குகளின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட வில்லை. | நிதிக் கூற்றுக்களிலும் பிராந்திய அலுவலகங் களின் கணக்கறிக்கை களிலும் காணப்பட்ட வித்தியாசங்களை கணக்கிணக்கம் செய்து பிழைகளை சரி செய்தல் வேண்டும். |
| இரத்தினபுரி | 20,137,376 | 20,230,036 | 92,660 | கட்டிடங்களின் நிர்மாணம் பிராந்திய அலுவலகங்களின் கணக்குகளின் பிரகாரம் வெளிப்படுத்தப் படவில்லை. | |
| தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் | | | | | |
| ஹந்தானை | 3,283,901 | 3,241,026 | 42,875 | 2018 ஆம் ஆண்டில் தளபாடங்கள், பொருத்திகளை கைதவிர்ப்புச் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | செய்தலாக ரூபா 42,875 பணம் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் போதும் அத்தொகை தவறுதலாக மீள் மதிப்பில் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. அத்தொகை பெறுமானத்தேய்வு களிலிருந்து மாத்திரம் கழிக்கப்பட்டது. |
| உள்ளக நடைமுறைக் கணக்கு | | | | |
| ஹந்தானை | 86,800,290 | 86,690,565 | 109,725 | கேகாலை மற்றும் ஹந்தானை பிராந்திய அலுவலகங்களுக் கிடையே இதுவரை சோடியம் பரிமாற்றம் செய்தல் பெறுமதி ஹந்தானை பயிற்சி நிலையத்தின் நடைமுறைக் கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை. |
| அட்டுறு நிவாரண ஆரம்ப மீதி - காலி | 39,921,584 | 39,184,834 | 736,750 | காலி பிராந்திய அலுவலகத்தில் 2019 ஆம் ஆண்டில் அட்டுறு பயிர்ச்செய்கையின் நிவாரணத்தின் ஆரம்ப மீதியைப் பதிவு செய்யும் போது இடம்பெற்ற குறைபாடு |
| மொத்தம் | | | 1,460,283<br>======= | |

### 1.6 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) 1998 ஆம் ஆண்டின் போது பசளை கடன் திட்டத்தின் கீழ் பசளை, தெளிகருவிகள், தராசுகள் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக சிறிய தேயிலைத் தோட்ட சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன் பணத்தில் மீளாய்வாண்டின் | 1998 ஆம் ஆண்டிலிருந்து இந்த அறவிட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது. அனைத்து இலங்கை சங்கங்கள் அமைப்பிற்கு அறவீடு செய்யும் பொறுப்பினை | பெறவேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு அல்லது முறையான அங்கீகாரத்துடன் ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இறுதியில் காணப்பட்ட ரூபா 4,300,942 கடன் மீதி இருபது ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்த்து வைப்பதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | ஒப்படைப்பதன் மூலம் எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கின்றேன். | |
| (ஆ) | 1998 ஆம் ஆண்டில் தேயிலைத் தொழிற்சாலைக்காக நிறம் பாகுபடுத்தல் இயந்திரங்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட கடன் பணத்தில் 4 தனியார் தொழிற்சாலைகளிட மிருந்து பெறவேண்டிய ரூபா 5,916,589 பணத்தை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த 04 நிறப் பாகுபடுத்தல் இயந்திரங்களில் ஈரியகஹ தொழிற்சாலைக்கு வழங்கப்பட்ட இயந்திரத்திற்குரிய அறவிட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் காலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு உரிய இயந்திரத்தை கலைத்தலின் பின்னர் பொறுப்புக்களை விடுவிக்கும் போது எங்களின் பணத்தை வழங்குவதற்கு இணங்கி கொள்ளப்பட்டது. மிகுதியாகவுள்ள நிறப் பாகுபடுத்தல் இயந்திரத்திற்கான அறவீடுகளை அறவீடு செய்வதற்கு இன்னும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பெறவேண்டிய பணத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நி.பி 681 | ஒழுங்கு விதிகளின் பிரகாரம் வானொலி மற்றும் தொலைக் காட்சிகளின் மூலம் பிரசித்தப்படுத்தல் அத்தியாவசியம் எனக் கருதுகின்ற சந்தர்ப்பத்தில் உரிய அமைச்சு செயலாளரின் முன் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் பிரசித்தப்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு முன் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது தொலைக் காட்சியின் மூலம் பிரசித்தப்படுத்தல் நடவடிக்கைக்காக ரூபா 2,194,091 செலவு செய்யப்பட்டிருந்தது. | இதற்கு முன்னர் சிறு தேயிலைத் தோட்டங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் தொலைக்காட்சி ஊடகங்களைப் பயன்படுத்தி தொழில்நுட்ப ரீதியான செய்திகள் பிரசித்தப்படுத்தப்படுத்தப் பட்டிருந்ததுடன் அவை எச்சந்தர்ப்பத்திலும் அமைச்சு செயலாளரின் முன் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டமை உறுதிப்படுத்தப்பட வில்லை. இந்த தொலைக்காட்சி பிரதிப்படுத்தலுக்காக நிறுவனத் தலைவரின் எழுத்து மூல அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது என தெரிவிக்கின்றேன். | பிரசித்தப்படுத்தல் நடவடிக்கைக்காக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் உரிய அமைச்சு செயலாளரின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ii) | நி.பி 682 | அரசியலில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் அரசியல் கட்சிகளை புகழ்கின்ற அனுபந்தங்கள் மற்றும் அறிவித்தல்களை வெளியிடுதல் தடை செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 3,583,162 செலவு செய்து அரசியல்வாதிகள் | தேசிய பத்திரிகைகளில் அதிகாரசபையின் தலைவரின் அங்கீகாரத்தின் கீழ் பத்திரிகை அறிவித்தல்கள் பல வெளியிடப்பட்டிருந்ததுடன் அவற்றில் எந்த அறிவித்தலின் மூலமும் எச்சந்தர்ப்பத்திலும் அரசியலில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் அரசியல் கட்சிகளை புகழ்வதனை | நிதிப் பிரமாணங்களிலுள்ள ஒழுங்கு விதிகளுக்கு உட்பட்டு பிரசித்தப்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மற்றும் அரசியல் கட்சிகளைப் புகழ்கின்ற அறிவித்தல்கள் வெளியிடப்பட்டிருந்தன | நோக்கமாகக் கொண்டு அவை உருவாக்கப்படாதவை என தெரிவிக்கின்றேன். | |
| (ஆ) | 2018/01 ஆம் இலக்க 2018 மார்ச் 19 ஆந் திகதிய நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் சுற்றறிக்கை | அதிகாரசபையினால் தேயிலை சக்தி நிதியத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த சங்க வாகனங்களை கைதவிர்ப்புச் செய்ததிலிருந்து 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 9,872,227 தொகையை திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காது அதிகாரசபையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கைதவிர்ப்புச் செய்யப்பட்ட சங்க வாகனங்களின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 9,872,227 பணம் தொடர்பாக அரசாங்க நிதித் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே இப்பணத்தில் சங்கங்களிடமிருந்து இன்னும் அறவிட வேண்டிய தொகையை எதிரீடு செய்வதற்கான அங்கீகாரம் வேண்டப்பட்டிருந்ததனால் திரண்ட நிதியத்திற்குச் செலவு வைக்குமாறு தெரியப்படுத்தும் வரை அதிகார சபையின் ஒரு பொறுப்பாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | திறைசேரி மானியங்களிலிருந்து கொள்வனவு செய்த வாகனங்களை விற்பனை செய்ததிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பணம் சம்பந்தமாக சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் 8 மற்றும் 12 ஆம் பிரிவுகள் | பொது ஒப்பந்த பதிவாளரின் கீழ் செல்லுபடியான பதிவு செய்தல் சான்றிதழ் இல்லாது கேள்விதாரருடன் பெறுகை மற்றும் மதிப்பீட்டுக் குழுக்களின் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்காதிருக்க வேண்டிய போதிலும் ரூபா 11,213,888 உடன்படிக்கை செய்த பெறுமதியான விக்ரமநாயக்க தேசிய பயிற்சி நிலையத்தின் வீதியின் இரு பக்கத்திலுமுள்ள அணையை நிர்மாணித்தல் மற்றும் ரூபா 7,682,375 தொகையான தலைமை அலுவலகத்தின் அலுமினியத்திலானா கதவு, யன்னல்களை | 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கைகள் அதிகாரச்சட்டத்தின் கீழும் பதிவு செய்து கொள்ள வேண்டுமென ஒப்பந்தக்காரர்களுக்கு மேலதிக நிபந்தனை உள்ளடக்கப் பட்டிருக்காததுடன் இக்டாப் (CIDA) நிறுவனத்தின் வரையறைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதன் மூலம் உரிய ஒப்பந்தச் செயற்பாட்டை கட்டுப்படுத்துவதற்கு இயலுமை காணப்படுவதாகவும் மேலதிக நிபந்தனைகள் விதிப்பதன் மூலம் உரிய சிறிய ஒப்பந்தக்காரர்கள் பின்னடைவுக்கு உட்படுவதனை கருத்தில் கொண்டு மேற்கூறியவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொது ஒப்பந்த பதிவாளரின் கீழான பதிவு செய்தல் சான்றிதழ் இல்லாது கேள்விதாரர் நடவடிக்கை எடுக்காதிருத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அமைக்கும் ஒப்பந்தம் சம்பந்தமாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அதற்கிணங்க எதிர்காலத்தில் மேற்கூறிய அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்குவிதிகளை கருத்தில் கொண்டு உத்தேசிக்கப்பட்ட வாறு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | |
| (ஈ) | பீஈடீ/12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபையினால் ரூபா 100,185,473 தொகை நிலையான மற்றும் குறுங்கால வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக உரிய அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் சிபார்சின் கீழ் அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்து பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ரூபா 15.3 மில்லியன் பணம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டது. இதற்கு மேலதிகதாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் ஊழியர் கடன் சுழற்சி நிதியத்திற்குச் சொந்தமான ரூபா 84.8 மில்லியன் பணம் ஏழு நாள் வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | உரிய அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 20,390,000 தொகையான ஏழு நாட்கள் வைப்புக்கள் 189 நாட்களிலிருந்து 2,584 நாட்கள் வரையான கால வீச்சில் காணப்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏழு நாட்கள் வைப்பிற்கான வட்டி விகிதம் 5.5 சதவீதம் மாத்திரமாக இருந்ததன் காரணத்தால் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருக்காமையின் காரணமாக அதிக வட்டி வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு அதிகாரசபைக்கு | ஏழு நாள் வைப்பில் முதலீடு செய்யப்பட்டதானது குறுங்காலத்தில் நிதித் தேவைப்பாடு இல்லாத மிகைப் பணமாகும். எனினும், முன் வைக்கப்பட்ட கடன் வேண்டுதல்களுக்காக கொடுப்பனவு செய்வதற்கு முடியுமான வகையில் ஏழுநாள் வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டது. நிலையான வைப்பு முதிர்ச்சியடையும் திகதி வரை இருக்க வேண்டியதன் | அதிகாரசபைக்கு மிகுந்த இலாபம் அளிக்க கூடிய வகையில் முதலீட்டுத் தீர்மானங்களை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இருந்த வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. | அடிப்படையில் ஏழுநாள் வைப்பில் முதலீடு செய்யப்பட்டது எனத் தெரிவிக்கின்றேன். | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 78,799,494 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 62,748,445 ஆக இருந்தது. அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 16,051,044 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டிற்கான அபிவிருத்தி செலவுகளுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட அரசாங்க மானியத்தை மிகைத்து ரூபா 42,827,484 தொகை அதற்காக செலவு செய்யப்பட்டிருந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) 1701/1 ஆம் இலக்க 2011 ஏப்ரல் 11 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் (அதிவிசேடம்) மூலம் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரினால் விடுவிக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் அழிவடைந்த நாற்றுக்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒரு தேயிலை நாற்றுக்காக வழங்கப்படுகின்ற நிவாரணப் பணம் ஒரு நாற்றுக்கு ரூபா 25 ஆக இருக்க வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மேற்கூறிய செலுத்த வேண்டிய பணத்தை முறையாக திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கு இணங்க ஒரு நாற்றுக்கு ரூபா 100 வீதம் ரூபா 138,992,167 நிவாரணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | வரிசை அமைச்சின் மூலம் பாதீட்டு திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் வருடாந்த நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.<br><br>அதற்கிணங்க உரிய நிவாரணப் பணத்தை அதிகரிப்பது தொடர்பாக சுற்றறிக்கையினை வழங்குவதற்கு முன்னர் உத்தேசிக்கப்பட்டவாறு நிவாரணப் பணத்தை அதிகரிப்பதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் நிவாரணத்தை அதிகரிக்கும் சுற்றறிக்கையினை வழங்கி அதற்கிணங்க நிவாரணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினால் உருவாக்கப்பட்ட கட்டளையை முறையாகத் திருத்தம் செய்யாது அதில் குறிப்பிட்ட வரம்புகள் மீறப்படுதல் இடம்பெறாதிருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) அதிகார சபையினால் 70 தேயிலைப் பரிசோதகர் / செயற்திட்ட உத்தியோகத்தர்களுக்கு வெளிக்கள கடமை நடவடிக்கைகளுக்காக மோட்டார் சைக்கிள்கள் வழங்கி உரிமைக் காலமான 8 ஆண்டுகள் கடப்பதற்கு முன்னர் அதிகாரசபையினால் 2014/15 பாதீட்டு பிரேரணையின் கீழ் அந்த 70 உத்தியோகத்தர்களுக்கு புதிய மோட்டார் சைக்கிள்களைப் பெற்றுக் கொள்வதற்காக சான்றுபடுத்தியமையின் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் ரூபா 10,112,300 ஆகும். | மோட்டார் சைக்கிள்களை வழங்குதலானது மாவட்ட செயலகத்தின் மூலம் இடம்பெற்றுள்ள துடன் விண்ணப்ப படிவங்களை சான்றுப்படுத்துதல் மாத்திரம் அதிகார சபையின் பொது முகாமையாளரால் மேற்கொள்ளப்பட்டு பாதீட்டு திணைக்களத்தின் ஆலோசனைக் கடிதத்தின் மூலம் ஒழுக்காற்று பிரச்சினைகள் இருந்த உத்தியோகத்தர்களைத் தவிர்த்து ஏனைய அனைத்து உத்தியோகத்தர் களுக்கும் மோட்டார் சைக்கிள்களைப் பெற்றுக் கொள்வதற்கு அனுமதி கிடைத்திருந்தது. | முன்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் உரிமைக்காலம் மிகைப்பதற்கு முன்னர் புதிய மோட்டார் சைக்கிள்களுக்கு சிபார்சு செய்யாதிருத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) தேயிலை மீள் பயிர்ச்செய்கை நிவாரணத்தை 05 கட்டங்களில் செலுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை மேற்கூறிய 05 கட்டங்களில் தொடக்க மூன்று கட்டங்களுக்காக ரூபா 918,115,761 பணத்தை பெற்றுக் கொண்ட நிவாரணப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் தேயிலை மீள் பயிர்ச் செய்கை செய்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதற்கிணங்க கடந்த 05 ஆண்டுகள் காலத்துள் | 2012-2017 காலப்பகுதியில் நிலத்தை தயார்ப்படுத்தலை மேற்கொண்ட அனுமதிப் பத்திரங்களில் பயிர்ச் செய்கையை பூர்த்தி செய்த விவசாயிகளின் எண்ணிக்கை 79% மற்றும் நிலத்தின் அளவு 74% ஆகும். எவ்வாறாயினும், நிவாரணத்தைச் செலுத்துவதற்குச் செலவு செய்த பணத்தில் 50% ஆனது எதிர்பார்த்த நோக்கங்களுக்கு ஈடுபடுத்தப்படவில்லை என்பதனை இணங்கி கொள்ள முடியாது. | நிவாரணத்தைப் பெற்றுக் கொண்டு தேயிலை மீள் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளாத விவசாயிகளை விவசாயத்தில் ஈடுபடச் செய்தல் அல்லது மீள அறவீடு செய்யும் நடைமுறையை அமுல் படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்த தேயிலை மீள் பயிர்ச் செய்கை நிவாரணப் பணத்தில் 50 சதவீதம் அளவானவை எதிர்பார்த்த நோக்கங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் மேற்கூறிய நிவாரணம் பெறுபவர்களை மீண்டும் தேயிலைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்துவதற்கு அல்லது அப்பணத்தை மீள அறவீடு செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | பயிர்ச்செய்கைப் பூரணப்படுத்தியிருக்காத அனுமதிப் பத்திரதாரர்களிடமிருந்து பணத்தை அறவீடு செய்வதற்காக தலைமை அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் பிராந்திய அலுவலகங்களின் மூலம் அப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்ற போதிலும் அந்நடைமுறைக்காக அதிகார சபைக்கு சட்ட ரீதியான அதிகாரம் இல்லை என்பதனால் சட்டரீதியான அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தும் அச்சட்டரீதியான ஏற்பாட்டை நீக்கி கட்டளையில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் மூலம் 2014 செப்தெம்பர் 09 ஆந் திகதி தெரியப்படுத்தப் பட்டிருந்தது. | |
| (ஆ) | சிறிய தேயிலை தோட்ட அபிவிருத்திச் சங்கங்களை பதிவு செய்தல், கட்டுப்படுத்துதல், சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு உதவி வழங்குதல் அதிகார சபையின் கடமையாக உள்ளதுடன் மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 7,522.098 செலவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் 1,475 சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்தி சங்கங்கள் காணப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதியில் | திருப்தியான மட்டத்திலுள்ள சங்கங்களின் செயற்பாடுகள் வீழ்ச்சியடைவதற்கு காரணமாக இருந்ததானது சங்கங்களின் பொதுவான சட்ட விதிகளில் நிர்ணயிக்கப்பட்டவாறு சங்கங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளின் தாமதத் தன்மையாகும். அதிகாரசபையினால் அந்நடவடிக்கைகள் தொடர்பாக | சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சங்கங்களின் செயற்பாடுகளை திருப்தியான மட்டத்தில் பேணுவதற்கு அதிகார சபை கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திருப்தியான மட்டத்தில் காணப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கை 270 மாத்திரம் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. அவ்வாறே மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அங்கத்துவ விவசாயிகளின் எண்ணிக்கை 17,462 ஆல் குறைவடைந்திருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் ஒவ்வொரு பிரிவுகளின் தேயிலை பரிசோதகர் ∴ விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் இல்லாததன் காரணமாக அதிகார சபையின் கீழ் பதிவு செய்துள்ள சங்கங்களின் செயலாற்றல் மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | தொடர்ச்சியாக தெரியப்படுத்தப் பட்டிருந்தும் சங்கங்கள் தொடர்ச்சியாக அரசாங்க அனுசரணை எதிர்பார்க்கின்றன. 2018 ஆம் ஆண்டின் போது சங்கங்களின் சட்ட விதிகளை காலரீதியாக திருத்தம் செய்து அதிகார சபையின் அனுசரணை மற்றும் வழிகாட்டல் வழங்கப்பட்டிருந்தும் சங்கங்களை செயற்படுத்துதலை திருப்தியான நிலையில் வைத்திருத்தல் அச்சங்கங்களின் தலைவர்களின் கட்டாய பொறுப்பு எனக் குறிப்பிடலாம். | |
| (இ) | பயிர் புனரமைப்பு உதவித் திட்டத்தின் கீழ் 2,460,000 அளவிலான தேயிலை நாற்றுக்களைப் பெற்றுக் கொள்வதற்காக அதிகாரசபை விலை மனுக்களைக் கோரியிருந்ததுடன் விலை மனுக்களைச் சமர்ப்பித்திருந்த 3 நாற்று மேடை உரிமையாளர்களும் போலியான நிறுவனங்கள் என்பது மதிப்பீட்டுக் குழுவினால் உறுதிப்படுத்தப் பட்டிருந்ததன் காரணமாக அவ்விலைமனுக்களை நிராகரத்து வெற்று நாற்றுக்களை வழங்குதல் நிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் அதிகார சபைக்குச் சொந்தமான 10 தேயிலை நாற்று மேடைகளில் 744,881 தேயிலை நாற்றுக்கள் விற்கப்படாது எஞ்சியிருந்தும் இந்த நாற்று மேடைகளை அபிவிருத்தி செய்து | மேற்கூறிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்வதற்காக பொருத்தமான நிலையிலுள்ள நாற்றுக்களை வழங்குதல் சிக்கலானது எனவும் தற்பொழுது பயிர்ச் செய்கை போகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கின்றேன். நிறுவன ரீதியான நாற்று மேடைகளில் வளர்க்கப்படுகின்ற தேயிலை நாற்றுக்களை நிவாரணத்தின் கீழ் தேயிலை மீள் பயிர்ச் செய்கை செய்கின்ற விவசாயிகளுக்கு வழங்குதல் முன்னுரிமைக் குறிக்கோளாக உள்ளதுடன் அவ்வாறு வளர்க்கப்படுகின்ற நாற்றுக்களை பயிர் புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஈடுபடுத்துவதாக யிருந்தால் மீண்டும் | நிறுவன ரீதியான தேயிலை நாற்று மேடைகளை அபிவிருத்தி செய்து நிவாரண நிகழ்ச்சித் திட்டத்திற்குத் தேவையான சிறந்த வளர்ச்சியுடனான தேயிலை நாற்றுக்களை வழங்குவதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கூறிய பயிர் புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் நாற்றுத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை | பயிரிடப்படுகின்ற காணிக்கு பயிர்த் தட்டுப்பாட்டு நிலை ஏற்படுவதற்கு வாய்ப்புக் காணப்பட்டது. சிறந்த வளர்ச்சியினைக் காட்டாத நாற்றுக்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதில்லை. அதற்கிணங்க உரிய ஆண்டின் இறுதியில் நிறுவன ரீதியான நாற்று மேடைகளில் 744,881 நாற்றுக்கள் எஞ்சியிருந்தும் அந்நாற்றுக்கள் துறையில் நடுவதற்காக பொருத்தமான மட்டத்திற்கு வளர்ந்திருக்காததனால் பயிர் புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஈடுபடுத்துவதற்கு முடியாமலிருந்தது. | |
| (ஈ) | தேயிலை உற்பத்திகளையும் வினைதிறனையும் அதிகரிப்பதற்காக சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு தரமான நாற்றுக்களைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரசபையில் பதிவு செய்த வணிக ரீதியான 870 தேயிலை நாற்று மேடைகள் காணப் பட்டிருந்தும் தேயிலை ஆராய்ச்சி உத்தியோகத் தர்களால் பரீட்சிக்கப்பட்ட தேயிலை நாற்று மேடைகளின் அளவு 18/19 ஆம் ஆண்டின் போது 25 சதவீதம் மாத்திரமாகும். அதன் காரணமாக வணிக ரீதியான தேயிலை நாற்று மேடைகளுக்காக காணப்பட்ட மேற்பார்வை கீழ் மட்டத்தில் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. | ஆண்டின் போது 870 நாற்று மேடைகளுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தும் 682 நாற்று மேடைகள் மாத்திரம் நாற்று இடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தன. 457 CN-5 பரிசோதனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அதனை சதவீதமாகக் கணிப்பிடும் போது 67% சதவீதமாகும். | தேயிலை ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் பங்குபற்றலினைப் பெற்றுக் கொண்டு வணிக ரீதியான தேயிலை நாற்று மேடைகளின் பரீட்சிப்பினை விரிவுபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | அதிகாரசபையானது விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 17.313,714 செலவு செய்திருந்ததுடன் அவற்றில் ரூபா 7,104,573 அதாவது 41 சதவீதம் அதிகார சபையினால் பிராந்திய அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்படுகின்ற விளையாட்டு விழாக்களின் இலத்திரனியல் மற்றும் அச்சு பிரச்சார நடவடிக்கைகளுக்காகச் செலவு செய்யப்பட்டிருந்தது. | அதிகளவான சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களை இலக்கு வைத்து செய்வதற்காக இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் அச்சு ஊடகங்களின் மூலம் பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருந்ததனால் தலைவரின் அங்கீகாரத்தின் கீழ் உரிய செலவு மேற்கொள்ளப் பட்டிருந்தது என்பதனைக் குறிப்பிடுகின்றேன். | அரசாங்கத்தின் நிதியை சிக்கனமாகவும் ஆக்கபூர்வமாகவும் மற்றும் விளைதிறனாகவும் உரிய நோக்கத்திற்காக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஊ) | 2017 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை தேயிலை சக்தி நலன்புரி நிதியத்தின் அங்கத்தவர் களுக்காக காப்புறுதியைப் பெற்றுக் கொள்வதற்கு தனியார் காப்புறுதி கம்பனிக்கு அதிகாரசபை ரூபா 27.358,214 தொகையினைச் செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும், தேயிலை சக்தி நலன்புரி நிதியத்தின் உரிமையாளர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக 2017 ஆம் ஆண்டிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 690,525 தொகை அறிக்கைத் திகதி வரை நலன்பெறுனர்களுக்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை மேலும் உள்ளகக் கணக்காய்வாளர்களின் 2019 நவம்பர் 15 ஆந் திகதிய அறிக்கையின் பிரகாரம் தேயிலை சக்தி நலன்புரி நலன் பெறுநர்களுக்கு ரூபா 8,502,397 தொகை செலுத்த வேண்டியிருந்தது என்பது அறிக்கையிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2020 செப்தெம்பர் 15 ஆந் திகதி | உரித்தினை வேண்டிக் கொள்கின்ற நலன் பெறுநர்கள் மற்றும் பின் உரித்தாளர்கள் தொடர்பாக உறுதிப்படுத்துவதிலுள்ள சிக்கலே உரிய கொடுப்பனவு ஆவணங்களை அதிகார சபையின் நிதிப் பிரிவிற்கு சமர்ப்பிக்காமைக்கான காரணமாக இருந்ததுடன் இக்குறைபாட்டினை பூர்த்தி செய்வதற்காக உரிய நலன் பெறுநர்கள் மற்றும் சங்கங்களிடம் ஆவணங்கள் கோரப்பட்டிருந்ததுடன் அக்குறைபாட்டினை நிவர்த்தி செய்து கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. உள்ளகக் கணக்காய்வாளரின் அறிக்கையின் பிரகாரம் தேயிலை சக்தி நலன்புரி நலன் பெறுநர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 8,502,397 பணம் | நலன்புரி நிதியத்தின் உரிமையாளர்களுக்கு தாமதமின்றி நலன்களை வழங்கக் கூடிய நடைமுறையைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வரை இப்பணம் அதிகார சபைக்கு கிடைத்திருக்க வில்லை. | காப்புறுதி நலன் பெறுநர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக காப்புறுதி கம்பனியிடமிருந்து உரிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |

**3.3 நிதிகளின் குறைந்த பயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட தேயிலை பசளை செயற்திட்டத்தின் கீழ் தேயிலை விவசாயிகளுக்கு நிவாரணங்களை கொடுப்பனவு செய்வதற்காக 2016 ஆம் ஆண்டில் அதிகாரசபையினால் பெற்றுக் கொள்ளப்பட்ட பணத்தில் ரூபா 32,065,870 தொகை எதிர்பார்த்த செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்படாது மீளாய்வாண்டிற் இறுதி வரை வைத்துக் கொள்ளப்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் பசளை நிவாரணப் பணத்தை கொடுப்பனவு செய்து செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் மிகுதியாகவுள்ள பணத்தை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு விவசாய உபகரணங்களை வழங்குவதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இக்கணக்கில் குறிப்பிடப்பட்ட தொகையை மானியமாக செம்மையாக்கி அடுத்துவரும் 5 ஆண்டுகளில் காலகழிவாகப் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கின்றேன். | செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் மிகுதியாகவுள்ள பணத்தை திறைசேரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ள இடரின் காரணமாக காலி, மாத்தறை, இரத்தினபுரி, களுத்துறை ஆகிய பிராந்திய அலுவலக அதிகாரப் பிரதேசம் தொடர்பாக சிறிய தேயிலைக் காணிகளுக்கு ஏற்பட்ட சேதங்களுக்காக | 2017 ஆம் ஆண்டில் வெள்ள அனர்த்தத்திற்கு உள்ளாகிய காணிகளுக்காக வழங்கிய நிவாரணத்தை கொடுப்பனவு செய்து மிகுதியாகவுள்ள பணத்தை அமைச்சிற்குத் தெரியப்படுத்தி | திறைசேரியிடமிருந்து பெற்ற பணத்தை எதிர்பார்த்த செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தியதன் பின்னர் மிகுதிப் பணத்தை மீண்டும் திறைசேரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முழுமையான மற்றும் அரைவாசி சேதங்களாக நிவாரணப் படிகளைச் செலுத்துவதற்கு வழங்கப்பட்ட பணத்தில் மிகுதியாகவுள்ள ரூபா 46,991,673 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரை திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்படாது கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் மீள் பயிர்ச் செய்கை புதிய பயிர்ச் செய்கை, சேதமடைந்த இடங்களில் பயிர்ச் செய்கை நிவாரணங்கள் கொடுப்பனவு செய்யப்பட்டது. மிகுதித் தொகையை மானியமாகக் கருதி அடுத்துவரும் 5 ஆண்டுகளில் காலக் கழிவாக நிதிக் கூற்றுக்களில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கின்றேன். | |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் பசளை மற்றும் வெள்ள நிவாரணமாக தேயிலை விவசாயிகளுக்கு நேரடியாக வங்கிக்கு வரவு வைத்தல் ரூபா 10,554,689 தொகையானது நிவாரணம் பெறுகின்ற தேயிலை விவசாயிகள் சமர்ப்பித்த கணக்குகள் செயற்படாதிருத்தல், பெயர் மற்றும் கணக்கு இலக்கங்கள் மாற்றமடைந்திருத்தல் முதலிய விடயங்களின் காரணமாக உரிமை கோரப்படாத காசோலைக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் அவற்றின் காலம் ஆறு மாதங்களிலிருந்து 5 ஆண்டுகள் வரையான வீச்சுடையதாக இருந்தது. இப்பணத்தை உரிய நிவாரணம் பெறுனர்களுக்குச் செலுத்துவதற்கு அல்லது திறைசேரிக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பசளை மற்றும் வெள்ள நிவாரணப் பணம் நலன் பெறுநர்களின் குறைபாடுகளின் காரணமாக கோரப்படாத காசோலைக் கணக்கில் தற்காலிகமாக கணக்கீடு செய்யப்பட்டது. எனவே நலன் பெறுனர்களுக்கு நிவாரண கோரிக்கைக்கு புதிய வங்கி கணக்கினை திறந்து முன்வைக்குமாறு பல தடவைகள் பதிவுத் தபால் மூலம் தெரியப்படுத்தப்பட்டது அதற்கு மேலதிகமாக தற்பொழுது வெளிக்கள உத்தியோகத்தர்களின் வாயிலாக உரிமைக் கோரல்கள் கிடைத்த நிவாரணம் பெறுனர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிவாரணப் பணத்தை உரிய காலத்தினுள் நிவாரணங்களுக்கு தகைமையுள்ள விவசாயிகளுக்கு வழங்குவதற்கு மற்றும் பயன்படுத்தப்படாத பணத்தை மீண்டும் திறைசேரிக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்தி வேலைகளுக்காக திவினெகும நிகழ்ச்சித் | திவிநெகும நிகழ்ச்சித் திட்டம் முடிவடைந்ததன் அடிப்படையில் மிகுதிப் பணத்தை ஈடுபடுத்தி | நிகழ்ச்சித் திட்டம் முடிவடைந்ததன் பின்னர் மிகுதிப் பணத்தை திறைசேரிக்கு அனுப்பி |

| | | |
|---|---|---|
| திட்டத்தின் கீழ் புதிய தேயிலை பயிர்ச் செய்கை மற்றும் மீள் பயிர்ச் செய்கை, மிளகு பயிர்ச் செய்கை, தேயிலை காணிகளில் பயிர் இல்லாத இடங்களில் நடுகை செய்தல் ஆகிய அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 3,196,085 தொகை 2016 ஆம் ஆண்டிலிருந்து உரிய செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்படாது மீளாய்வாண்டின் இறுதி வரை வைத்துக் கொள்ளப்பட்டிருந்தது. | கொழுந்து கத்திரிக் கோல் மற்றும் கொழுந்து கூடைகளை சந்தை விலைகளில் அரைவாசியை அறவிட்டு சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு அங்கீகாரத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டது. திவினெகும நிகழ்ச்சித் திட்டத்தின் மிகுதி தொகையும் மானியமாக கணக்கீடு செய்து அடுத்து வரும் 05 ஆண்டுக்குள் காலக்கழிவு செய்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனத் தெரிவிக்கின்றேன். | வைத்தல் வேண்டும். |

## 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் சிபார்சின் பிரகாரம் தேயிலைக் காணிகளின் பயன்பாட்டிற்காக பொருத்தமான முள்ளுக் கத்தியானது முனைப் பகுதியும் கைபிடியும், ஒரே இரும்பு அச்சில் இடப்பட்டு ஒன்றாகத் தயாரிக்கப்பட்ட முள்ளுக் கத்தியாக இருக்க வேண்டிய போதிலும் கேள்வி மனுக் கோரும் போது அந்த மாதிரி விபரக் குறிப்பிற்கு முரணாக மீளாய்வாண்டில் ரூபா 27,145,150 செலவு செய்து இரும்பு கைபிடியும் முனைப் பகுதியும் ஒட்டப்பட்டு தயாரிக்கப்பட்ட 9,450 முள்ளுக் கத்திகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதற்கிணங்க தேயிலை விவசாயிகளுக்கு தேயிலை தொழிலுக்காக பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான, முள்ளுக் கத்திகளைக் கொள்வனவு செய்வதற்கு அதிகார சபைக்கு முடியாதிருந்தது. இதன் காரணமாக விளைதிறனைக் | கட்டளையிடப்பட்ட முள்ளு கத்திகளின் அளவினை அதிகார சபைக்கு வழங்குதலானது 2019 யூன் 06 இலிருந்து 2019 ஒக்தோபர் 07 ஆந் திகதி வரையான காலத்தில் இடம்பெற்றது. 2019 செப்தெம்பர் 18 ஆந் திகதி சனாதிபதித் தேர்தல் வெளிப்படுத்தப் பட்டதுடன் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட பொருட்கள் பகிர்ந்தளிக்கப்படுதல் நிறுத்தப்பட்டன. 2020 ஆம் ஆண்டில் அனுமதிப் பத்திரதாரர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டம் நடைபெறுகின்ற வேளையில் | பெறுகைச் செற்பாட்டின் போது அதிகார சபையின் தேவைப்பாட்டின் அடிப்படையில் மாதிரி விபரக் குறிப்பினைத் தயாரித்து செலவு செய்யப்படுகின்ற பணத்தினை விட சாதகமாக பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கருத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே மேற்கூறிய கொள்வனவு செய்வதற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.8.4(இ) பிரிவின் பிரகாரம் விடயம் தொடர்பான நிபுணத்துவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. மிளாய்வாண்டின் போது விவசாய உபகரணங்களை பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் மேற்கூறிய விலைக்கு கொள்வனவு செய்யப்பட்ட முள்ளுக் கத்திகளையும் உள்ளடக்கி தேயிலை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு 12,235 முள்ளுக் கத்திகள் காணப்பட்டிருந்தும் மீளாய்வாண்டில் 596 முள்ளுக் கத்திகள் மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. அதன் காரணமாக ஆண்டின் இறுதியில் ரூபா 32,095,016 பெறுமதியான முள்ளுக் கத்திகள் எதிர்பார்த்த நோக்கங்களுக்காக ஈடுபடுத்தப்படாது பிராந்திய அலுவலகங்களில் விளைவற்று கஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பகிர்ந்தளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் நாட்டில் உருவாகியுள்ள கொரோனா தொற்று நோய் நிலைமையை முன்னிட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிட்டவாறு நடாத்துவதற்கு முடியாதிருந்தது.<br><br>எனினும், தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்களை பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மத்தியில் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கின்றேன். | |

### 3.5 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 25/2014 ஆம் இலக்க 2014 நவம்பர் 12 ஆந் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாது மீளாய்வாண்டின் போது அமையம், செக்ரோல் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் அதிகாரசபையினால் 52 ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். மேற்கூறியவாறு சேர்த்துக் | நியமன அதிகாரியின் அதிகாரத்தினை அத்துமீறி வழங்கப்பட்டிருந்த இந்நியமனங்களை முடிவுறுத்தி மேற்கூறிய நிலைமையை சரி செய்வதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஊழியர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது சுற்றறிக்கை ஏற்பாடுகள் பின்பற்றப்படுதல் வேண்டும். |

கொள்ளப்பட்ட ஊழியர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 16,004,184 சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.6 சிக்கனமற்ற செலவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது எழுத்து மூல மற்றும் நேர்முகப் பரீட்சைகளின் அடிப்படையில் தேயிலை பரிசோதகர் / விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவிகளுக்காக எட்டுப்பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் மேலும் 13 பேர் காத்திருத்தல் பட்டியலிடப்பட்டிருந்தனர். பின்னர் ரூபா 532,553 தொகை காத்திருத்தல் பட்டியலிடப்பட்ட உத்தியோகத்தர்களின் பயிற்சிக்காக செலவு செய்யப்பட்டிருந்தும் 2019 யூன் 24 ஆந் திகதி அப்பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக பயிற்றுவிக்கப்பட்ட 13 நபர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு சட்டரீதியான ஏற்பாடு இல்லை என்பதனால் மீண்டும் பத்திரிகை விளம்பரங்கள் வெளியிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக காத்திருத்தல் பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்களைப் பயிற்றுவிப்பதற்காக செலவு செய்யப்பட்ட பணம் சட்டரீதியற்ற மற்றும் சிக்கனமற்ற செலவாக அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட தேயிலை பரிசோதகர் / விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் எட்டு பேருக்கு மேலதிகமாக காத்தித்தல் பட்டியலில் இருந்த தகைமையுள்ள பதின் மூன்று பேர் அதிகார சபையின் தலைவரினால் வழங்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் ஹந்தானை பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற பயிற்சி செயலமர்விற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்பதற்கு சட்ட ரீதியான ஏற்பாடுகள் இல்லாத விண்ணப்பதாரர்களை பயிற்றுவிப்பதற்காக பணம் செலவு செய்யாதிருத்தல் வேண்டும். |